வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். C.C. 268/2021

**வழக்கு சாட்சி- அ.சா.7**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | பூமிநாதன் | : | | |
| தந்தை/கணவர் பெயர் | பாலசுப்ரமணியன் | : | தொழில் | தலைமைக் காவலர், HC 2686. பட்டுக்கோட்டை தாலுக்கா கா.நி., |
| கிராமம் | | : | | |
| தாலுக்கா | | : | வயது | 36/2024 |

(எதிரி ஆஜர்.)

**நாள் : 09.10.2024**

**முதல் விசாரணை** :

1) நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுக்கா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 07.08.2021ம் தேதி நான் திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராக நிலைய பொறுப்பில் இருந்தபோது திருச்சி பிரண்ட் லைன் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த பிரச்சன்னா என்பவர் காயம்பட்டு மயக்க நிலையில் இருந்ததால் அவர் உடன் இருந்த அவரது மனைவி மீனா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, நிலையம் வந்து நிலைய குற்ற எண். 531/2021 சட்டப் பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை**

**அ.சா.ஆ 4/அ.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2) 08.08.2021ம் தேதி காலை 11.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாண்டியன், விக்னேஷ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.5/அ.சா.7 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6/அ.சா.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் சாட்சிகள் மீனா, சதீஷ்குமார், அழகர், ராதிகா, பாண்டியன் மற்றும் விக்னேஷ்வரன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவத்தில் காயமுற்ற பிரசன்னா 10.08.2021ம் தேதியன்று இறந்துவிட்டதால் மேற்படி வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) அ.சா.1 யை திருச்சி பிரண்ட்லைன் மருத்துவமனையில் 08.08.2021ம் தேதியன்று காலை 11.00 மணிக்கு விசாரணை செய்தேன். அ.சா.1 யை விசாரணை செய்தபோது சம்பவம் குறித்து கூறினார். அ.சா.1 கேள்விபட்ட சாட்சிதான் என்றால் சரிதான். அவர் நேரடியாக சம்பவத்தை பார்க்கவில்லை. அ.சா.1 அவரது கணவர் இறந்து போனதற்கு இழப்பீடு பெறுவதற்காக அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வழக்கை பொய்யாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2) ஆஜர் எதிரி மீது வழக்கு பதிவு செய்ய அ.சா.1 சொன்னதால் வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்தில் இருந்து கொண்டே சாட்சிகளின் வாக்குமூலங்களை தயார் செய்தேன் என்றால்

சரியல்ல. சாட்சி சதீஷ்குமாரை எங்கு வைத்து, எந்த தேதியில் விசாரணை செய்தீர்கள் என்றால் பிரண்ட்லைன் மருத்துவமனையில் 08,08,2021ம் தேதியன்று 12-12.30 மணியளவில் விசாரணை செய்தேன். சாட்சி அழகரை நான் விசாரணை செய்யவில்லை. சாட்சி ராதிகாவை பிரண்ட் லைன் திருச்சி மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தேன். மேற்கண்ட நபர்களை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் விசாரணை செய்யவில்லை என்றும், நானாக வாக்குமூலங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.